**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.21/2023**
**Prosecution Witness**:10

| Name | சதீஷ் (PW 10) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி, கோவில்புதூர், கருக்கம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சின்னியம்பாளையம் அருகே நான் வேலை செய்து கொண்டிருந்தபோது விபத்து நடந்ததாக நண்பர் கூறினார். அங்கு சென்று பார்த்தபோது அங்கிருந்த போலீசார் என்னை விசாரித்தார்கள். அப்போது நான் விபத்தை பார்க்கவில்லை என்று கூறிவிட்டேன்.

**அரசு தரப்பில் சாட்சியை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 154ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையின்போது கடந்த 30.04.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு சின்னியம்பாளையம் காலனிக்கு எதிரே உள்ள முருகன் டீக்கடைக்கு வெளியே நானும் மாரிமுத்து மற்றம் பழனிசாமி ஆகியோர்கள் நின்று பேசி கொண்டிருந்ததாகவும், அப்போது எங்கள் ஊரை சேர்ந்த முத்துவீரன் விளக்கேத்தி - கொடுமுடி செல்லும் ரோட்டில் இடது புறமாக நடந்து சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது அவருக்கு பின்னால் வந்த TATA ACE TN 54 X 2439 என்ற எண்ணுள்ள வண்டியில் பிளாஸ்டிக் வியாபாரம் செய்து கொண்டு இடது புறமாக நின்று கொண்டிருந்ததாகவும், அதே ரோட்டில் JCB TN 86 F 4078 என்ற வண்டியின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனகுறைவாகவும்ஓட்டி சென்று ரோட்டின் இடதுபுறமாக நின்று கொண்டிருந்த TATA ACE வண்டியின் பின்பக்கத்தில் மோதியதால் TATA ACE வாகனம் முன்நோக்கி சென்று

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.16 07:18:25 +0530

நடந்து சென்ற முத்துவீரன் மீது மோதியதாகவும், இந்த விபத்தை நான் நேரில் பார்த்ததாக கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் உண்மை சங்கதிகளை மறைத்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.16 07:18:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.21/2023**
**Prosecution Witness**:11

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரமோகன் (PW 11) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து கொண்டு RR Tractors என்ற பெயரில் JCB இயந்திரங்கள் வைத்து தொழில் செய்து வருகிறேன். 30.04.2023ம் தேதியன்று எனது நிறுவனத்திற்கு சொந்தமான JCB வாகனத்தை சதீஷ்குமார் என்பவர் இயக்கி சிவகிரியில் விபத்து ஏற்படுத்தியதாக கேள்விபட்டேன். போலீசார் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து எனது வண்டி விவரங்களை கேட்டார்கள், அதற்கு நானும் வாகனத்தின் ஆவணங்களை போலீசாரிடம் காண்பித்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.10.16 07:18:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.